**செய்தி வெளியீடு எண்:101** நாள்: – **6.2.2008**

## செய்தி வெளியீடு – 6.2.2008

## உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் டோக்கியோவில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி செயல் இயக்குநருடன் சந்திப்பு

## 9 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டம் 1340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்க ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி ஒப்புதல்

தமிழக அரசு சென்னை மாநகரில் 9 ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்துள்ளது. அத்திட்டத்திற்குரிய நிதி உதவி கோருவதற்காகவும், தொழில்நுட்ப உதவிகளை பெறுவதற்காகவும், தர்மபுரி மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தேவையான நிதியுதவிக்காகவும், தமிழக அரசின் சார்பில் ஜப்பான் சென்றுள்ள தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அங்கு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் (Japan Bank for International Cooperation(JBIC) முதுநிலை செயல் இயக்குநர் திரு. டிசியோகுசி அவர்களை இன்று (6.2.2008) சந்தித்தார்.

அப்பொழுது, திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திரு. டிசியோகுசி அவர்களிடம் சென்னை மெட்ரோ ரயில் திட்டம் பற்றி விரிவாக விளக்கியதுடன் இத்திட்டத்திற்குத் தேவையான நிதி உதவியையும், தொழில்நுட்ப உதவியையும் தமிழக அரசுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டார். திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட திரு. டிசியோகுசி அவர்கள் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்குத் தேவையான நிதியுதவியை ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கி வழங்குமென மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மேலும், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட கால கோரிக்கையாகவுள்ள, அம்மாவட்டங்களில் புளோரைடினால் பாதிக்கப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற குடியிருப்புகளுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்கக் கூடிய 1340 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் உடனடியாக நிதியுதவி வழங்குமாறும் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியிடம் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தினார். திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்தக் கோரிக்கையையும் உடனடியாக ஏற்றுக் கொண்ட ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின்

**முதுநிலை செயல் இயக்குநர் திரு. டிசியோகுசி அவர்கள் இத்திட்டத்திற்குரிய நிதி உதவிகளை அளிப்பதாக ஒப்புதல் தெரிவித்ததுடன், இம்மாதத்திலேயே இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கப்படும் என்றும் கூறினார். அப்பொழுது 2008 மார்ச்சு மாதத்தில் மத்திய அரசுக்கும் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கிக்கும் இடையில் இத்திட்டத்திற்கான கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் தெரிவித்தார்.**

**இவற்றுடன், திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, திருச்சி மாநகருக்குக் குடிநீர் வழங்கும் விரிவாக்கத் திட்டம் மற்றும் 6 நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கும் நிதியுதவி வழங்கிட ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி முடிவு செய்துள்ளதாகவும் திரு. டிசியோகுசி தெரிவித்தார்.**

**சென்னை மெட்ரோ ரயில் திட்டத் தலைவர் திரு. சையத் முனிர் ஹோடா, இ.ஆ.ப., திட்ட மேலாண்மை இயக்குநர் திரு. டி.வி. சோமநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு. க. தீனபந்து, இ.ஆ.ப., ஆகியோர் இந்த சந்திப்பின்போது உடன் இருந்தனர்.**

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.